**தலைப்பு 210 – அரசாங்க தகவல் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அரசாங்க தகவல் திணைக்களத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 யூலை 30 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் விரிவான வருடாந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 யூலை 30 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திணைக்களத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக்கூடிய வகையில் அதனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்வதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கப்படும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் கண்டுபிடிப்புக்கள் தொடர்பாக பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) உப பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதி செயலாற்றல் கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிச் செயலாற்றல் கூற்றின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது மூலதனச் சொத்துக்களின் கொள்வனவிற்காக ரூபா 5,743,484 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் நிதியல்லாச் சொத்துக்கள் கூற்றில் கொள்வனவாக ரூபா 4,842,327 தொகை மாத்திரமே காட்டப்பட்டிருந்தது. அதற்கிணங்க ரூபா 901,157 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | மீளாய்வாண்டின் போது மூலதனச் சொத்துக்களின் கொள்வனவிற்காக ரூபா 5,743,484 தொகை செலவிடப்பட்ட போதிலும் நிதியல்லாச் சொத்துக்கள் கூற்றில் கொள்வனவாக ரூபா 4,842,327 தொகை மாத்திரமே பதிவு செய்யப்பட்டது. சிகாஸ் (CIGAS) கணக்கிற்கு மாவட்ட செயலகங்களால் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களை பதிவு செய்வதற்கான முறைமையொன்று காணப்படாதமை, நாட்குறிப்பிற்கு எடுக்கும் போது சில கொள்வனவுகள் தவறவிடப்பட்டமை மற்றும் 2019 ஆம் ஆண்டில் இதனை பொருளிருப்பிற்கு எடுத்ததன் காரணமாக ஆரம்ப மீதிக்கு வளிப்பதனாக்கி எடுக்கப்பட்டிருந்தமை ஆகியன காரணமாக இவ் வேறுபாடு ஏற்பட்டிருந்தது. | வாக்குப்பணப் பேரேடு மற்றும் நிதிக்கூற்று என்பவற்றின் பெறுமதிகள் ஒன்றுடனொன்று சமப்படுமாறு சரியான தொகையை பயன்படுத்தி நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

### 1.6.2 காசுப்பாய்ச்சல் கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிதிச் சொத்துக்களின் புனரமைப்பு மற்றும் பதவியணியினர் பயிற்சிக்காக ஏற்பட்ட ரூபா 18,550,399 தொகையான செலவினங்கள் பௌதீக சொத்துக்களை கட்டியெழுப்புதல் அல்லது கொள்வனவு செய்தல் மற்றும் ஏனைய முதலீடுகளை கொள்வனவு செய்தல் என்பவற்றிற்காக ஏற்பட்ட செலவினங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக, முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய தேறிய காசுப்பாய்ச்சல் மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய தேறிய காசுப்பாய்ச்சல் என்பன அதே தொகையால் முறையே அதிகரித்தும் குறைத்தும் காட்டப்பட்டிருந்தன. | நிதி சொத்துக்களின் புனரமைப்பு மற்றும் பதவியணியினர் பயிற்சி என்பவற்றிற்காக ஏற்பட்ட செலவினங்களைக் காட்டுவதற்கு நிதிக் கூற்றில் ஏனைய உருப்படிகள் எதுவும் காணப்படாததன் காரணமாக பௌதீக சொத்துக்களை கட்டியெழுப்புதல் அல்லது கொள்வனவு செய்தல் மற்றும் ஏனைய முதலீடுகளை கொள்வனவு செய்தல் என்பவற்றிற்காக ஏற்பட்ட செலவினமொன்றாக இதனை கருத்தில் கொண்டு நிதிச் சொத்துக்களின் புனரமைப்பு மற்றும் பதவியணியினர் பயிற்சிக்காக ஏற்பட்ட செலவினங்கள் காசுப்பாய்ச்சல் கூற்றில் பதிவுசெய்யப்பட்டன. ஆகையால் முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய தேறிய காசுப்பாய்ச்சல் மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய தேறிய காசுப்பாய்ச்சல் என்பன ரூபா 18,550,399 ஆல் முறையே அதிகரித்தும் குறைத்தும் காட்டப்பட்டிருந்தன. | நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது சரியான தொகைகள் உள்ளடக்கப்பட வேண்டும். |

### 1.6.3 அரசாங்க உத்தியோகத்தர்களிற்கான முற்பணக் கணக்கிணக்கக் கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| அரசாங்க உத்தியோகத்தர்களிற்கான முற்பணக் கணக்கு தொடர்பாக திணைக்களப் புத்தகங்கள் மற்றும் திறைசேரி அச்சீட்டுத்தாள்கள் என்பவற்றிற்கிடையே ஆண்டின் போது பெறுவனவுகள், கொடுப்பனவுகள் மற்றும் வரவு மீதிகளில் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்ட போதிலும் கணக்கிணக்க கூற்றில் அவை வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இன்னொரு நிறுவகத்தால் கையளிக்கப்பட்ட வரவு மீதிகள் எமது மாதாந்த கணக்குப் பொழிப்புக்களில் பதிவு செய்யப்பட்டிருக்காத போதிலும் கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் பதிவேடுகளில் பதிவு செய்யப்பட்டுள்ளன. ரூபா 2,038,544 ஆன குறித்த தொகை ஆண்டின் போது வரவுகளின் வேறுபாடாக கணக்காய்வு ஐயவினாக்களில் காட்டப்பட்டிருந்தது. | கணக்கிணக்கக் கூற்றில் வேறுபாடுகள் சரியாக வெளிப்படுத்தப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | திணைக்கள புத்தகங்களின் பிரகாரம் ஆண்டின் போது ரூபா 12,253,618 தொகையான எமது நிறுவகத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்த கடன் மீதிகள் மற்றும் ஏனைய நிறுவகத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்த கடன் மீதிகள் ஆகியவற்றின் கூட்டுமொத்தம் செலவுகளாக கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலே குறிப்பிடப்பட்ட ஆண்டின் போதான வரவு மற்றும் செலவு வேறுபாடுகளின் கூட்டுமொத்தம் ஆகக்கூடிய வரவு மீதி எல்லையின் வேறுபாடாக கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிடப்பட்டுள்ளது. | |

**2. நிதி மீளாய்வு**

**2.1 செலவின முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) 2 மீண்டெழும் செலவின விடயக் குறியீடுகளிற்காக குறைநிரப்பொன்றின் மூலம் ரூபா 2,149,160 நிதியேற்பாடு மாற்றப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 6,385,000 தொகை நி.பி. 66 இன் மூலம் ஏனைய மீண்டெழும் செலவின விடய குறியீடுகளிற்கு மாற்றப்பட்டிருந்தன. | 2020 ஆம் ஆண்டிற்கான திணைக்களத்தின் செலவினம் தொடர்பாக செலவின விடயக் குறியீடுகளில் சேமிப்புக்கள் காணப்பட்டதன் காரணமாக நி.பி. 66 இன் மூலம் ரூபா 6,385,000 தொகை மாற்றப்பட்டிருந்தது. பாதுகாப்பு அமைச்சின் கோரிக்கையின் அடிப்படையில் நிதியேற்பாடாக ரூபா 2,149,160 தொகையை திறைசேரி விடுவித்திருந்ததுடன் அத் தொகை பாதுகாப்பு அமைச்சின் செலவின குறியீடுகளிற்கு செலவு வைக்கப்பட்டு எமது திணைக்களத்தின் செலவின குறியீடுகளிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் செலவினத்திற்காக சரியான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) 4 மூலதன செலவின விடயக் குறியீடுகள் மற்றும் 9 மீண்டெழும் செலவின விடயக் குறியீடுகளின் மதிப்பிடப்பட்ட நிதியேற்பாட்டை விஞ்சி 43 சதவீதம் தொடக்கம் 209 சதவீதம் வரையான நிதியேற்பாடுகள் நி.பி. 66 இன் | 2020 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீடுகள் அக்காலத்தில் நிலவிய சூழ்நிலையை கருத்தில் கொண்டு 2019 யூன் மாதத்தில் தயாரிக்கப்பட்டிருந்தது. எனினும் 2020 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீடு 4 குறைநிரப்பு மதிப்பீடுகள் மூலம் | |

| | | |
|---|---|---|
| மூலம் மாற்றப்பட்டிருந்தன. ஆகையால் மதிப்பீடுகளை தயாரிப்பதில் பலவீனம் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | வழங்கப்பட்டிருந்ததுடன் குறித்த சில செலவின விடயக் குறியீடுகளிற்காக மதிப்பிடப்பட்ட நிதியேற்பாட்டை விடக் குறைவாகவே நிதியேற்பாடுகள் பெறப்பட்டிருந்தன. மேலும் அக்காலத்தில் நாட்டில் நிலவிய சூழ்நிலையின் அடிப்படையில் மதிப்பிடப்பட்ட தொகைக்கும் உள்ளபடியான தொகைக்கும் இடையே வேறுபாடுகள் ஏற்பட்டன. | |

## 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை ஏற்படுத்துதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) நிதிப்பிரமாணம் 94(1) இன் பிரகாரம் பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை ஏற்படுத்தும் போது நிதியாண்டிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியேற்பாடுகள் விஞ்சப்படக்கூடாத போதிலும் 8 செலவின விடயங்களிற்காக நிதியேற்பாடுகளை விஞ்சி ரூபா 2,308,508 கூட்டுமொத்த தொகையால் பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. | 2020 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு நிதியேற்பாடு 4 குறைநிரப்பு மதிப்பீடுகள் மூலம் வழங்கப்பட்டிருந்ததுடன் குறித்த சில செலவின விடயங்களிற்காக மதிப்பிடப்பட்ட நிதியேற்பாட்டை விடக் குறைவாகவே நிதியேற்பாடுகள் பெறப்பட்டிருந்தன. மேலும் நாட்டினுள் நிலவிய சூழ்நிலைக்கேற்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியிருந்ததன் காரணமாக நிதியேற்பாடுகளை விஞ்சி பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட வேண்டியிருந்தன. | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் பொறுப்புத் தொகை ஆண்டின் நிதியேற்பாட்டை விஞ்சக்கூடாது. |
| (ஆ) 2021 ஆம் ஆண்டின் போது தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்த ரூபா 332,931 தொகையான 05 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளின் பெறுமதி மீளாய்வாண்டின் பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டின் போது தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்த பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.<br><br>அவதானிப்பு சரியானதாகும். | பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் சரியாக உள்ளடக்கப்பட வேண்டும். |

### 2.3 கணக்கீட்டு உத்தியோகத்தரின் உறுதிப்படுத்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்வதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையினை செயற்றிறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்களை செய்ய வேண்டும். மேலும் அம்மீளாய்வுகள் எழுத்து மூலம் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். எனினும் அவ்வாறான மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டதை உறுதிப்படுத்துவதற்கான கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்தில் செயற்பாட்டிலுள்ள உள்ளகக் கட்டப்பாட்டு முறைமையின் குறைபாடுகள் மற்றும் பலவீனங்கள் பிரிவுத் தலைவர்களின் கூட்டங்களிலும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களிலும் அவ்வப்போது கலந்துரையாடப்பட்டு அச் சந்தர்ப்பங்களில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் மற்றும் பலவீனங்கள் தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிலுள்ள ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டு தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2015 மே 15 ஆம் திகதிய எவ்.எம்.01/2015/01 ஆம் இலக்க நிதி அமைச்சு சுற்றறிக்கையின் 3(அ) பந்தி | வெளிநாட்டு அரசாங்கம் அல்லது நன்கொடை முகவரால் வெளிநாடுகளில் ஏற்படும் பிரயாணம், தொலைபேசி மற்றும் விமானநிலைய வரிகள் போன்ற செலவினங்களை மேவுகை செய்து இடைநேர் செலவு படியாக கொடுப்பனவு வழங்கப்படாத போது ஆகக்கூடியது 30 நாள் காலப்பகுதிக்கு நாளொன்றுக்கு ஐ.அ.டொலர் 40 ஆக இடைநேர் செலவு படி | குறித்த உத்தியோகத்தர் பங்குபற்றிய இந்தியாவில் நடைபெற்ற பயிற்சி வகுப்பிற்காக வழங்கப்பட்ட கடிதத்தில், இந்தியாவுக்கு சென்று திரும்புவதற்கான விமானக் கட்டணம், கற்கைநெறி கட்டணம், தங்குமிடம் மற்றும் உணவு, கற்கைநெறியின் ஒரு பகுதியாக பிரயாணம் செய்தல் மற்றும் விமான நிலையத்திற்குச் சென்று திரும்புதல் என்பவற்றிற்காக ☐. 1500 (இந்திய ரூபா) செலுத்தப்படும் என | உரிய சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் படிக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | செலுத்தப்பட வேண்டிய போதிலும் சுற்றறிக்கைக்கு முரணாக இந்தியாவில் நடைபெற்ற பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தில் பங்குபற்றியிருந்த உத்தியோகத்தரிற்கு இந்திய அரசாங்கம் நாளொன்றுக்கு ஐ.அ.டொலர் 21 இற்குச் சமமான □. 1500 (இந்திய ரூபா) தொகையை செலுத்தி அனைத்து ஏனைய தொடர்புடைய வசதிகளையும் வழங்கியிருந்த போதிலும் திணைக்களத்தால் இடைநேர் செலவு படியாக ரூபா 201,234 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | குறிப்பிடப்பட்டிருந்தது. கற்கைநெறியின் தேவைப்பாட்டைத் தவிர இந்தியாவினுள் பிரயாணம் செய்தல், விமான நிலைய வரிகள் மற்றும் தொலைபேசி ஆகியவற்றிற்கான தொகை இந்த செலவினங்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால் 2015 மே 15 ஆம் திகதிய நிதி அமைச்சின் எவ்.எம்.01/2015/01 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3(அ) பத்தியின் பிரகாரம் உத்தியோகத்தருக்கு இடைநேர் செலவு படி செலுத்தப்பட்டுள்ளது. | |
| (ஆ) | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | 2020 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு தொடர்பான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றதுடன் திணைக்களத்தின் பதவியணியினர் இக் காலப்பகுதியில் மட்டுப்படுத்தப்பட்டிருந்ததன் காரணமாக அகற்றல்களை மேற்கொள்ளுதல் சிக்கலானதாக உள்ளது. அந் நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட்டதும் பொருள் மெய்மையாய்வு பூர்த்தி செய்யப்பட்டு பொருள் மெய்மையாய்வு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 3 ஆம் பந்தி | செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய நாளதுவரையாக்கப்பட்ட நிறுவக கட்டமைப்பு, அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளபடியான பதவியணியினர் தொடர்பான விபரங்கள், வருடாந்த நடவடிக்கைகளிற்காக கட்டுநிதி | இது தவறுதலாக செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- |

தேவைப்பாட்டிற்கான திட்டம் மற்றும் உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் என்பன சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.5 முற்பணங்களை வழங்குதலும் தீர்ப்பனவு செய்தலும்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2015 யூலை 14 ஆம் திகதிய 03/2015 ஆம் இலக்க நிதி அமைச்சு சுற்றறிக்கை மற்றும் 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் செயல் நிமித்த கட்டுநிதிகள் உரிய வேலை பூர்த்தி அடைந்ததும் 10 நாட்களினுள் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டிய போதிலும் 4 சந்தர்ப்பங்களில் 3 உத்தியோகத்தர்களால் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 362,000 தொகை 33 நாட்கள் தொடக்கம் 125 நாட்கள் வரையான காலதாமத்துடன் தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தது. | இக் காலப்பகுதியின் போது நாட்டில் செயற்படுத்தப்பட்டிருந்த ஊரடங்கு, அரசாங்க நிறுவனங்களில் மட்டுப்படுத்தப்பட்ட பதவியணியினர் அறிக்கையிட்டிருந்தமை, கொடுக்கல் வாங்கல்களை ஒழுங்காக மேற்கொள்வதற்கான சாத்தியத்தன்மை காணப்படாமை ஆகிய காரணங்களினால் முற்பணங்களை தீர்ப்பனவு செய்வதில் தாமதங்கள் ஏற்பட்டிருந்தன. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 2.6 வைப்பு மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 7,488,595 தொகையான 10 காலாவதியான வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் அரச வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு அல்லது இயன்றளவு விரைவாக மீளளிப்பதற்கு அல்லது ஒப்பந்த வைப்புக்கள் தொடர்பாக ஒப்பந்தங்களிலிருந்து ஏற்பட்ட நட்டங்களை அறவீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | புதிய ஊடக நிலையத்தின் நிர்மாணம் தொடர்பாக நிறுத்தி வைக்கப்பட்ட பணத்தொகை ரூபா 7,488,595 ஆக உள்ளது. இவ் வைப்பை விடுவிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 கடமைப்பொறுப்புக்களை ஆற்றத் தவறியமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட செயன்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தின் நோக்கங்களை அடைந்துகொள்ளும் பொருட்டு வருடாந்த பாதீட்டின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தில் ரூபா 10.5 மில்லியன் தொகையான 34 செயற்பாடுகள் மீளாய்வாண்டின் போது நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டன. | 2020 ஆம் ஆண்டின் போது நாடு முழுவதும் பரவியிருந்த கொவிட் 19 தொற்றுநோயின் விளைவாக தனிமைப்படுத்தல் ஊரடங்கு மற்றும் பிரயாண கட்டுப்பாடுகள் காரணமாக கடமைக்கு மட்டுப்படுத்தப்பட்ட பதவியணியினர் அழைக்கப்பட வேண்டியிருந்தமை மற்றும் குறித்த வரையறுக்கப்பட்ட பதவியணியினர் அத்தியாவசிய ஊடக செயலெல்லைகளின் அடிப்படையில் பணிக்கமர்த்தப்பட வேண்டியிருந்தமை என்பன காரணமாக வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்திலுள்ள அதிக செயற்பாடுகள் திட்டமிடப்பட்டவாறு பூர்த்திசெய்யப்பட முடியாதிருந்தன. | தாமதமின்றி திட்டமிடப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு கவனம் செலுத்தப்பட வேண்டும். |

### 3.2 எதிர்பார்க்கப்பட்ட பூர்த்திசெய்தல் மட்டம் அடைந்துகொள்ளப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட செயன்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் 12 செயற்பாடுகளின் செயன்முன்னேற்றம் 4 சதவீதம் தொடக்கம் 100 சதவீதம் வரையான விச்சில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டதுடன் திணைக்களத்தின் நோக்கங்களை அடைந்துகொள்ளும் பொருட்டு வருடாந்த பாதீட்டின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தில் மீளாய்வாண்டின் போது நிறைவேற்றுவதற்கு 17 செயற்பாடுகள் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அச் செயற்பாடுகளின் செயன்முன்னேற்றம் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டின் போது நாடு முழுவதும் பரவியிருந்த கொவிட் 19 தொற்றுநோயின் விளைவாக தனிமைப்படுத்தல் ஊரடங்கு மற்றும் பிரயாண கட்டுப்பாடுகள் காரணமாக கடமைக்கு மட்டுப்படுத்தப்பட்ட பதவியணியினர் அழைக்கப்பட வேண்டியிருந்தமை மற்றும் குறித்த வரையறுக்கப்பட்ட பதவியணியினர் அத்தியாவசிய ஊடக செயலெல்லைகளின் அடிப்படையில் பணிக்கமர்த்தப்பட வேண்டியிருந்தமை என்பன காரணமாக வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்திலுள்ள சில செயற்பாடுகள் திட்டமிடப்பட்டவாறு அடைந்துகொள்ளப்பட முடியாதிருந்தன. | எதிர்பார்க்கப்பட்ட இலக்கை அடைந்துகொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 3.3 நட்டங்களும் சேதங்களும்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வெகுஜன ஊடக அமைச்சின் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த பிடி 9625 ஆம் இலக்க அரசாங்க தகவல் திணைக்களத்திற்கு சொந்தமான வாகனம் 2016 திசெம்பர் 26 இல் விபத்துக்குள்ளாகியிருந்தது. அச் சமயத்தில் வாகனம் செலுத்துவதற்கான அனுமதிப்பத்திரத்தை கொண்டிருக்காத நபர் ஒரவரால் அவ் வாகனம் செலுத்தப்பட்டிருந்தது, குறித்த விபத்தின் பின்னர் வாகனத்தை திருத்தம் செய்வதற்கு 2020 ஆம் ஆண்டின் போது திணைக்களத்தால் ரூபா 453,000 தொகை செலவிடப்பட்டிருந்தது. எனினும் காப்புறுதி கம்பனியிடமிருந்து நட்டஈடு எதுவும் அறவீடு செய்யப்பட்டிருக்காததுடன் குறித்த சேதம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. நிதிப்பிரமாணம் 104(3) இன் கீழ் 2016 திசெம்பர் 26 இல் இடம்பெற்ற விபத்து தொடர்பான பூர்வாங்க அறிக்கை 2020 செப்தெம்பர் 04 இல் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. வாகனத்தை செலுத்தியிருந்த நபரிடமிருந்து ரூபா 453,000 தொகையை அறவீடு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் இவ் அறிக்கைத் திகதி வரையிலும் அத்தகைய அறவீடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சூரிய ஒளி மற்றும் மழையிலிருந்து ஏற்படக்கூடிய சேதங்களை தவிர்க்கும் பொருட்டு பிடி 9625 ஆம் இலக்க கெப் வாகனம் விபத்தின் பின்னர் நீண்ட காலமாக திணைக்களத்தின் வாகன தரிப்பிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. கூறுவிலைகள் கோரப்பட்ட பின்னர் திருத்தம் செய்யப்பட்டு திணைக்களத்தால் செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. வெகுஜன ஊடக அமைச்சால் நி.பி. 104 இன் கீழ் புலனாய்வுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் தொடர்புடைய நட்டங்களை அறவீடு செய்யும் நோக்கத்தில் பொறுப்பான மக்களிற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு சட்டமா அதிபர் திணைக்களத்தின் அறிவுறுத்தல்களை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என வெகுஜன ஊடக அமைச்சின் செயலாளர் அறிவித்திருந்தார். | பொது வளங்களை முறையாக பயன்படுத்துவது தொடர்பாக நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கைகளை எடுப்பதற்கும் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுததுவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 3.4 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) பொதுச் சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரத்தின் பிரகாரம் நிறைவேற்று தயாரிப்பாளர் (திணைக்களம் சார்ந்த) பதவியில் பதிற்கடமையாற்றும் | பொதுச் சேவை ஆணைக்குழுவின் வழிகாட்டலின் பிரகாரம் எதிர்காலத்தில் விண்ணப்பங்களை கோருவதன் ஊடாக தகுதிவாய்ந்த உத்தியோகத்தர் ஒருவரை | வெற்றிடங்களை நிரப்புவதற்கு உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உத்தியோகத்தர் பணிப்பாளர் (அரசாங்க திரைப்படங்கள் பிரிவு) பதவியில் பதிற்கடமையாற்றுவதற்காக 3 தடவைகள் நியமனம் செய்யப்பட்டிருந்தார். 2019 யூலை 01 தொடக்கம் ஒரு வருட காலப்பகுதிக்கு இப் பதவிக்கு நியமனம் செய்த காலத்தில் தாமதமின்றி ஒப்பந்த பதவியின் வெற்றிடத்தை நிரப்புவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு பொது சேவை ஆணைக்குழுவால் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தன. எனினும் திணைக்களத்தால் பதிற்கடமை அடிப்படையில் குறித்த பதவிக்கு அவ் உத்தியோகத்தர் தொடர்ச்சியாக நியமனம் செய்யப்பட்டிருந்தார். | நியமனம் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பது குறிப்பிடப்படுகின்றது. | |
| (ஆ) | பதவி வறிதாக்கப்பட்ட 3 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 211,486 தொகை அறவீடு செய்யப்பட வேண்டியிருந்ததுடன் குறித்த மீதி 19 ஆண்டு காலத்திற்கு மேலாக முன்கொண்டு வரப்பட்டிருந்த போதிலும் 2021 பெப்ரவரி 28 வரையிலும் அத் மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2 உத்தியோகத்தர்களின் இடர் கடன் மீதியை அறவீடு செய்வதற்கு சட்டமா அதிபர் திணைக்களத்தின் அறிவுறுத்தல்கள் கோரப்பட்டுள்ளதுடன் உரிய அறிவுறுத்தல்கள் இன்னும் பெறப்பட்டிருக்கவில்லை. மற்ற பெண் உத்தியோகத்தரின் பதவி வறிதாக்கலை கருத்தில் கொள்வதற்காக மேன்முறையீடு ஒன்றை அவர் மேற்கொண்டிருந்ததுடன் குறித்த மேன்முறையீட்டின் தீர்மானத்தின் அடிப்படையில் பெறவேண்டிய தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | பெறவேண்டியவைகளை அறவீடு செய்வதற்கு உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2020 திசெம்பர் 19 இல் இறந்த உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 159,870 கடன் மீதி 2021 பெப்ரவரி 28 வரையிலும் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2020 திசெம்பர் 19 இல் இறந்த அமரர் பீ.எஸ்.டி. பிறேமசுந்தரவிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 159,870 கடன் மீதியை அவரது தங்கிவாழ்வோரிமிருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | பெறவேண்டியவைகளை அறவீடு செய்வதற்கு உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 4. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்ளுதல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கணனிமயப்படுத்தப்பட்ட முறைமையொன்றில் ஊடகவியலாளர்களிற்கான அடையாள அட்டையை வழங்குதல் நிலைபேறான அபிவிருத்தி இலக்கொன்றாக இனங்காணப்பட்டிருந்தது. குறித்த வேலையின் செயன்முன்னேற்றம் 100 சதவீதமாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்ளுதலின் செயன்முன்னேற்றத்தின் கீழ் இது “2021 ஆம் ஆண்டிலிருந்து ஸ்ரீ லங்கா ரெலிக்கொம்முடன் இணைந்து குறித்த பணியை கணனிமயப்படுத்துவதற்கு தேவையான மென்பொருளை வடிவமைத்து அமுல்ப்படுத்துவதை ஆரம்பிக்க முடியும்” எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆகையால் அத் தகவல்களிற்கிடையே வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | 2020 ஆம் ஆண்டின் போது ஏற்பட்ட கொவிட் 19 காரணமாக மென்பொருளைப் பயன்படுத்தி ஊடகவியலாளர்களுக்கான அடையாள அட்டைகளை வழங்குவதற்கு சம்பந்தப்பட்ட பதவியணியினரிற்கு போதுமானளவு பயிற்சியை வழங்க முடியாதிருந்தது. ஆகையால் 2021 இன் ஆரம்பத்தில் பல மாதங்கள் குறித்த பயிற்சிக்காக செலவிடப்பட வேண்டியிருந்தது. தற்போது அத்தகைய பயிற்சி வழங்கப்பட்டு அந் நடவடிக்கைகள் அமுல்ப்படுத்தப்பட்டு வருகின்றன. | அறிக்கைகளில் சரியான தகவல்கள் வழங்கப்பட வேண்டும். |

## 5. மனித வளங்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| (அ) 2020 ஆம் ஆண்டிற்கான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 343 ஆகவும் உள்ளபடியான பதவியணியினர் 237 ஆகவும் காணப்பட்டது. இதன் விளைவாக 106 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் இவ் அறிக்கை திகதி வரையிலும் அவ் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய வெற்றிடங்களில் இணைந்த சேவைகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு பொது நிர்வாக அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் திணைக்களப் பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | அத்தியாவசியமான பதவிகளை நிரப்பவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 40(1) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் திணைக்களத்திற்காக உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் நியமனம் செய்யப்பட வேண்டிய போதிலும் அரசாங்க தகவல் திணைக்களத்திற்கான உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் 2021 ஏப்ரல் வரையிலும் நியமனம் செய்யப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்திற்கான உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவரை நியமனம் செய்வதற்கு பொது நிர்வாக அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் நிரந்தர நியமனம் செய்யப்படும் வரை பதிற்கடமை அடிப்படையிலேனும் உத்தியோகத்தர் ஒருவரை நியமனம் செய்வதற்கு வெகுஜன ஊடக அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |